DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.164/2023**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிவேல் | | : |
| த/பெ | : பாலகிருஷ்ணன் | மதம் | : |
| கிராமம் | : ஆவடி | தொழில் | : ஓய்வு, Air force |
| வட்டம் | : | வயது | : 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 05.03.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>: PW1**

நான் Air Force ல் Civilian ஆக வேலை பார்த்து 31.07.2025 ஓய்வு பெற்றுவிட்டேன். எனது மாத வருமானம் ரூ.75,000/- பெற்று வந்தேன். எதிரியை எனக்கு பணம் தருவதற்கு முன்பாகவே 6-7 வருடம் தெரியும். எதிரிக்கு பணம் கொடுத்த சமயம் நான் வேலையில் தான் இருந்தேன். எதிரிக்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.2,00,000/- ம் கைமாத்தாக தான் கொடுத்தேன். எதிரி வாங்கிய பணத்தை 6 மாதத்திற்குள் தருவதாக தெரிவித்ததின் பேரில் 22.12.2019 ல் பணம் கொடுத்தேன். எந்த தேதியில் எதிரி என்னிடம் வழக்கு காசோலை கொடுத்தார் என்றால் பணம் வாங்கி 2 ஆண்டுகள் கழித்து 27.09.2021 தேதியிட்ட காசோலை அன்றைய தினமே கொடுத்தார். காசோலை எண்.572531 ஆகும். இந்த காசோலை வைத்து தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை, அதன் பின்பு ஒரு காசோலை கொடுத்தார். அந்த காசோலை எண்.572532 ஆகும். மேலே குறிப்பிட்ட இரண்டு காசோலைகளும் அடுத்தடுத்த காசோலைகள் என்றால் சரிதான். காசோலை எண்.572531 திருப்பப்பட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பு எனது தரப்பில் அனுப்பப்பட்டதா

என்றால் அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்ய சம்மதமா என்றால் சம்மதம். சாட்சி சம்மதம் தெரிவித்ததின் பேரில் காசோலை எண்.572531 அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வரும் வாய்தாவில் எடுத்து வரும் பொருட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K